RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21446

OPEN ACCESS

# மணிமேகலை மற்றும் சிவஞான சித்தியார் முன்வைக்கும் கருதல் அளவை

ச. கோகுல் கிருஷ்ணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் இந்தியா

# The scope of arguments presented by Manimekalai and Sivagnana Siddhiyar

S. Gokul Krishnan [a, *]

[a] Department of Tamil, Bharathiar University, Coimbatore, India.

* Corresponding Author: gokulkrishnan@buc.edu.in

Received: 01-05-2021
Revised: 29-09-2021
Accepted: 13-10-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

Measurement refers to describing the nature of objects to be measured by the measurer. For measuring, instruments like the eye as a unifying tool and units of measurement as differentiating tools are helpful. In metaphysical traditions, there exist measures to comprehend conceptual entities. On a metaphysical basis, phenomena establish themselves through measures. In the context of Tamil literature, the first text that discusses metaphysical measures is Manimekalai. In Manimekalai, in the 'Kandam' section where the sum of cosmic time is questioned, the poet Sathanar presents metaphysical concepts through the discourse of philosophers. In Manimekalai, the measurement theory discussed by the measure philosophers centers on a specific kind of hypothetical measure called 'thought measure.' The text mentions ten types of measures that the measure philosopher describes. Among them, only two—'visual perception' and 'cognition' are accepted by Buddhism. In the subsequent 'Thavathiram Poondutharumangett' section, the authors of Manimekalai explain visual perception and cognition measures according to the Buddhist metaphysical tradition. This article examines comparatively the measure of inference presented in Manimekalai and the measure of reasoning found in the Subhakka section of Siva Jnana Siddhiyar, which elaborates extensively on the knowledge of Saiva Siddhanta metaphysics.

**Keywords:** Sivagnana Siddhiyar, Manimekalai, Buddhism, Measurement

## முன்னுரை

மெய்யியல் மரபில் இன்றியமையாத கூறாக விளங்குவது தர்க்கம். பல்வேறுவகையான நியாயங்களை அளவைகளின் துணையோடு எடுத்துக்கொண்ட கருத்தை நிறுவது தர்க்கத்தின் அடிப்படை. இத்தகைய கூறுகள் தமிழ் மெய்யியல்களில் மட்டும் அல்லாமல் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலும் உரைகளிலும் காணலாம். குறிப்பாக குண்டலகேசி, நீலகேசி இலக்கியங்கள் மற்றும் தொல்காப்பிய உரைகளைக் குறிப்பிடலாம். முதல் சமயக் காப்பியமான மணிமேகலையில் பசியும் உணவும் துறவும் முதன்மை இடத்தைப் பெறுவதாக அமைத்து அதன் ஊடாக சாத்தனார் பௌத்த சமய நெறியை மெய்யியல் மரபை விளக்கிச் செல்கிறார்.

மணிமேகலையின் பின் மூன்று இயல்களில் பௌத்த மையம் சற்றே விரிந்து காப்பிய ஓட்டத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. சமயக் கணக்கர்

தம்திறம் கேட்ட காதையில் பல சமய மெய்யியல் மரபுகள் பேசப்படுகின்றன. அக்காதையில் பேசப்பட்ட மெய்யியல் கூறுகளில் அளவையியல் பகுதி தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில் பௌத்த சமய மரபுகளாக விளக்கப்படுகின்றது. அவ்வளவையியல் சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியாரிலும் ஒலிக்கின்றது. அளவையியலில் ஒன்றான கருதல் அளவை குறித்து இக்கட்டுரை சிந்திக்கின்றது.

## ஆய்வு மூலங்கள்

சங்கம் மருவிய காலத்தில் தோன்றியதாக கூறப்படுகின்ற மணிமேகலையில் சமயக்கணக்கர் தம்திறம் கேட்ட காதையும், தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையும் அளவையியல் பேசும் பகுதிகளும், மெய்கண்டாரின் மாணவர் அருணந்தி சிவத்தால் செய்யப்பட்ட நூல் சிவஞான சித்தியார். இந்நூல் பிறசமயத்தார் கொள்கை மறுத்துரைக்கும் பரபக்கம், தன்பக்கம் (சைவசித்தாந்தம்) கருத்துக்களை எடுத்துரைக்கப்படும் சுபக்கம் என்ற இருபகுதிகளை உடையது. அந்நூலின் சுபக்கப் பகுதியின் பாயிரப்பகுதியை அடுத்து அளவை இலக்கணம் என்ற பகுதி இடம்பெறுகின்றது. அப்பகுதியியல் இடம் பெறும் அளவையியல் கருத்துக்களும் இக்கட்டுரையின் மூலங்கள்.

## அளவையியல் விளக்கம்

பிரமாணவியல் என்பது தமிழில் அளவையியல் என்று குறிக்கப்படுகின்றது. இதற்கு 'அளத்தற்கு கருவி' என்பது பொருள். பிரமாணம் என்பதில் உள்ள பிரமா என்பதற்கு 'தூய அறிவுக்குக் காரணம்' என்பது பொருள் (தமிழ்த்துறை ஆசிரியர்கள்,1979) தற்கால மெய்யிலாளர்கள் அளவையியலை 'அறிவு வாயில்கள்' என்று குறிக்கின்றனர்.

பொருள்களைப் பெயர், விளக்கம், உத்தி கொண்டு ஆராய்தல் என்ற திறத்தினால் விளக்கும் முறையியலை அளவையியல் என்று தருக்க சாத்திரம் வரையறை செய்கின்றது. அளத்தல் என்பதில் அளப்பவன், அளத்தற்கருவி, அளக்கப்படும் பொருள் என்று இடம் பெறும்.

## கருத்தளவை

அனுமானம், கருதல், கருத்தல் என்பன ஒரே பொருள் குறிப்பன. அனுமானா என்பது 'அனு' 'மானா' என்னும் இரு சொற்கள் சேர்ந்து உருவானது ஆகும். 'அனு' என்பதற்குப் 'பிறகு' எனப் பொருள் 'மானா' என்பதற்கு 'அறிவு' என்னும் பொருள். (சீனிவாசன்,இரா. காமராசன்,க. (2014) ஒன்றினைப் பற்றி பின்னர் அறிதல் என்னும் காட்சிக்கு உட்பட்ட ஒன்றைக்கொண்டு மனத்தால் எண்ணி அறிதல் எனவும் பொருள்படுதல் குறிப்பிடத்தக்கது. மறைந்திருக்கும் பொருளின் விட்டு நீங்காத இயல்பினைக் கொண்டு அதனிருப்பினை அறிவதாகும் (சரவணன் நல்லூர் (பதி.), பக்.14) என சிவஞானமுனிவர் உரைக்கின்றார்.

“அனுமானம் அவினா பாவம்

பேசுறும் ஏதுக்கொண்டு

மறைபொருள் பெறுவதாகும் சித்தியார்” , பா.07 (சரவணன், நல்லூர்.சா,2016)

எனச் சிவஞான சித்தியாரும்

கருத்தள வாவது

குறிக்கொ ளனுமா னத்தனு மேயத்

தகைமை யுணருந் தன்மைய தாகும் (மணிமேகலை 27:25-27) (சோமசுந்தரனார், பெ.வே (உரை.ஆ.) 2022)

என்று கூறுகின்றது. அதாவது ஏதுவிற்கு நிலைக்களமான குறியாகக் கொண்டு அனுமானத்தாலே சாதிக்கப்படும் பொருளின் உண்மையினை உணர்த்தும் தன்மையை உடையதாகும் (மணிமேகலை, பக்.617)

‘புகை உள்ள இடத்தில் நெருப்பு உண்டு’ என்று அறிவது என்ற எடுத்துக்காட்டையே மணிமேகலையும் சிவஞான சித்தியாரும் பயன்படுத்தப்படுகின்றது.

பக்க மிம்மலை நெருப்புடைத் தென்றல்

புகையுடைத் தாதலா லெனல் பொருந்தேது (மணிமேகலை,29: 59-61) (சோமசுந்தரனார், பெ.வே (உரை.ஆ.) 2022)

புகையால் அனுலுண்டடுக்களை போல் (சிவஞானசித்தியார், பா.16) (சரவணன், நல்லூர்.சா,2016)

இம்மலை தீ உடையது புகையுடைமையான் என்ற தொடரில், மலையின்பால் தீயுடைமை துணியப்படும் என்பது அனுமேயம்(மேற்கோள்), புகையுடைமை அதனைச் சாதிக்கும் ஏது ஆகும். அது தீயுண்மையைச் சாதிக்கும் திறன் அனுமானம். இங்கு ஏதுவிற்கு நிலைக்களமாய் உள்ளது புகையாகும்.

## கருத்தளவை வகைகள்

அனுமான அளவையை மணிமேகலை ‘மூவகையுற்றுது பொது எச்சம் முதலாம்’ (மணிமேகலை : 27, 29) என்று கூறுகின்றது. பொது, எச்சம், முதல் என்று மூன்று வகையாக அனுமான அளவை அமைவது பெறப்படுகின்றது. சிவஞான சித்தியார் ‘ஏது மூன்றாம் இயல்பு காரியத்தோடு அனுபலத்தியென’ (சிவஞானசித்தியார், பா.15) என வகைகளை இயல்பு, காரியம், அனுபலத்தி என்ற பெயரால் குறிப்பிடுகின்றது. (வடிவேலு அருணை, சி. (உரை.ஆ.), 1999)

## பொது கருத்தளவை

சாதன (ஏது) சாத்தியம் (துணிப்பொருள்) என்னும் இவை கொண்டு பொருளின் உண்மையை உணர்த்தல் பொது கருத்தளவை எனப்படும். ‘காட்டிடத்தே யானையின் பிளிறல் குரலைக் கேட்டவுடன் அங்கு யானை உண்டு என உணர்த்தல்’ என்பதைச் சான்றாக மணிமேகலைக் கொடுக்கின்றது. (மணிமேகலை, 27:31 - 33) சிவஞான சித்தியார்

மரம் முதலிய சொற்கள் மரம் முதலிய பொருள்களை உணர்த்துவது போன்றது இயல் கருத்தளவை.(பா.15) சொற்கள் தம்தம் பொருள்களைக் கருதி உணர்தற்குத்தாம் வாயிலாய் நிற்பதே இயல்பு அறிகுறியாம் .

## எச்ச கருத்தளவை

பள்ளத்தை நோக்கிப் பெருகி வருகின்ற பெருவெள்ளமாகியக் காரியத்தைக் கொண்டு மேட்டிடத்தே மழை பெய்தலைத் துணிந்து முடிவு செய்தல் எச்சக்கருத்தளவை. (மணிமேகலை 27: 33,34). சிவஞான சித்தியார் புகை கண்ட வழி நெருப்பின் இருப்பை உணர்த்துவது போன்று என்ற விளக்கத்தை எச்சக் கருத்தளவைக்கு கொடுக்கின்றது (சிவஞான சித்தியார், பா.15). மணிமேகலை சிவஞான சித்தியார் இரண்டும் நூல்களும் இவ்வளவைக்கு காரியத்தைக் கொண்டு காரணத்தை அறிதல் என்ற நிலையில் விளக்கம் தருகின்றன. ஆகையால் இவ்வளவைக்குக் காரிய அளவை என்று குறிக்கப்பெறுகின்றது.

## முதல் கருத்தளவை

வானத்தில் உள்ள கார்முகிலைக் கண்ட இம்முகில் மழையாகப் பெய்யும் என உரைப்பதாம் (மணிமேகலை, 27:35-37) சிவஞான சித்தியார் பனியாகிய முதல் இல்லாமை குளிராகிய விளைவு உண்டாகாமையைக் காட்டுதலைக் குறிப்பிடுகின்றது. (சித்தியார் பா.15) இங்கு கார்முகில், பனி என்ற முதற்காரணக் கண்டு காரியமாகிய மழை, குளிரின் தன்மை பேசப்படுகின்றது. இக்கருத்தளவைக்கு காரணப்பொருளாகிய முதல் அவசியமாகின்றது என்பதால் இவ்வளவை முதல் கருத்தளவை எனப்படுகின்றது.

## முடிவுரை

கருத்தளவை என்று மணிமேகலையில் சுட்டப்றும் அனுமா அளவை சிவஞான சித்தியாரில் கருதல் என்று குறிக்கப்பெறுகின்றது. பொதுவாக புகையைக்கொண்டு அதனைவிட்டு நீங்காத நெருப்பை அறிதல் என்ற மணிமேகலை கையாண்டு பொதுவான சான்றையே சிவஞான சித்தியாரும் பயன்படுத்துக்கின்றன. ஏதுவின் நிலை கொண்டு அனுமானம் காரணம், காரியம், சாமானியம் என்று மூவகையாகக் கூறுபடுமாயினும் காரிய அனுமானமே பிழையில்லாதது என்பது அளவையியல் போலியில் விளக்கப்பட்டுள்ளது.

## References

Saravanan, S., (2016) Sivagnanasithiyar Subakkamum Madhavachivannamunivar Urayum, Saiva Siddhantha Perumanram, Chennai. India

Somasundaranar, P.Ve 2022) Manimekalai, Tirunelveli South Indian Saiva Siddhantha Publishing House Limited, Chennai, India

Srinivasan, I., Kamarasan, K. (2014) Religion and Philosophy in Manimekalai, Metha Publishing House, Chennai, India

Tamil Department Teachers, (1979) Manimekalai Thoughts, Annamalai University, Chidambaram, India

Vadivelu Arunai, C. (1999) Sivagnanasithiyar Subakkam Senthamizurai, Kavin Publications, Coimbatore, India

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License